' வேதாரண்யம் ' பெயர் மாற்றம்

* 183 வினா—திரு. ந. சோமசுந்தரம் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தஞ்சை மாவட்டம் (வேதாரண்யம் வட்டம்) 'வேதாரண்யம்' என்ற பெயரை திருமறைக்காடு என்று மாற்ற செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : ஆம்.

துணை வட்டங்களை வட்டமாக உயர்த்தல்

* 184 வினா—திரு. எம். முத்தையா : உணவு-வருவாய்த்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) துணை வட்டங்களை தரம் உயர்த்தி தனி வட்டம் ஆக்குவதற்கு என்னென்ன தகுதிகள் இருக்க வேண்டும் ?

(இ) ஒட்டப்பிடாரம் துணைவட்டத்தை தரம் உயர்த்தும் உத்தேசம் ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) ஒரு துணை வட்டத்தை தனி வட்டமாக தரம் உயர்த்தும்போது, பொதுவாக அத்துணை வட்டத்தின் பரப்பளவு, மக்கள் தொகை, இட அமைப்பு பணம் செலுத்தவும் இதர நிருவாக சம்பந்தப்பட்ட காரியங்களுக்கும் பொதுமக்கள் வட்டத் தலை நகருக்குச் செல்ல வேண்டிய தூரமும் அதனால் மக்களுக்கு ஏற்படும் சிரமங்கள் ஆகியவற்றைப் பொதுவாகக் கருத்திற்கொண்டு ஒரு முடிவெடுக்கப்படுகிறது.

(இ) இல்லை.

* 185 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு உணவு-வருவாய்த் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி துணை வட்டத்தை தனி வட்டமாக மாற்றியமைக்கும் செயற்குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

Salt areas in Tuticorin

" 186 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Works, be pleased to state.—

(a) whether the Central Government has undertaken to hand over the salt areas in Tuticorin to the State Government; and

(b) if so, details thereof ?

THE HON. THIRU S. MADHAVAN : Yes. Precise details regarding the extent of land, the compensation amount to be paid to the Government of India for the above lands, etc., are yet to be received from the Government of India.

1972 சனவரி 31]

திரு. என். டென்னிஸ்: சார், உப்பு உற்பத்தியை மாநில அரசாங்கம் ஏற்று நடத்தும் உத்தேசம் எதுவும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களிலே சிலபேர் அந்த உப்பு உற்பத்தியைச் செய்து வருகிறார்கள். அதைப்போல தனியார் செய்து வரும் இடங்களையெல்லாம் அரசு தொழில் வளர்ச்சிக்காகவும், துறைமுக வளர்ச்சிக்காகவும் எடுத்து இருக்கிறது. மத்திய அரசாங்கத்திற்குச் சொந்தமான நிலங்களையும் நம்மிடத்திலே ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அப்படி ஒப்படைக்கப்பட்ட பிறகு அந்த நிலங்களை எப்படிப் பயன்படுத்துவது என்பதைப் பற்றி முடிவு செய்யலாம்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார்: தலைவரவர்களே, தூத்துக்குடியில் அந்த உப்பளங்கள் இருக்கும் பகுதிகளின் அருகாமையில் உள்ள பலரும் அவர்களுடைய குடிகளை அமர்த்தியிருக்கிறார்கள். அவர்கள் பாதிக்கப்பட்டு இருக்கிறார்கள். பலமுறை அவர்கள் அரசாங்கத்திற்கு மனுக் கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு மாற்று இடம் கொடுக்க அரசாங்கம் வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதுவரையில் அரசாங்கத்திற்கு வந்திருக்கிற கோரிக்கை உப்பளங்களை அகற்றாமல் பார்க்க இந்த நில ஆர்ஜிதம் கைவிடப்பட வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். இது முன்னாலே பல ஆண்டுகளுக்கு முன் எடுக்கப்பட்ட ஒரு முயற்சி. நாம் கொடுத்திருக்கும் உறுதிமொழி, அரசாங்கம் நில ஆர்ஜிதம் எடுத்துக்கொண்டாலும், இந்த நிலங்கள் உடனடியாக வேறு தொழிற்சாலை அல்லது அதற்குரிய வளர்ச்சிக்குத் தேவைப்பட்டாலொழிய அவர்களை வெளியேற்றுவதிலிருந்து நாம் கண்காணிப்போடு நடத்திக் கொள்வோம். அவர்களுக்கு அந்த உறுதியைத் தந்திருக்கிறோம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, மத்திய அரசாங்கம் இந்த நிலங்களை மாநில அரசுக்குக் கொடுப்பதற்கு என்ன நிபந்தனைகளை விதித்திருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இது 1935-ஆம் ஆண்டு கவர்ன்மண்ட் ஆஃப் இண்டியா ஆக்ட்படி எப்படியோ போய்ச் சேர்ந்திருக்கிறது. நாம் திருப்பி ஒப்படைக்க வேண்டுமென்று கேட்டிருக்கிறோம். அவர்கள் சொல்லியிருப்பது, நஷ்ட ஈடு கொடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். 'ஆன பிரின்சிபிள்' நாம் ஒத்திருக்கிறோம். நஷ்ட ஈட்டை நாம் ஆராயும்பொழுது, நம் மாநிலத்திற்குச் சொந்தமான அந்த நிலம் எப்படி முதன்முதலாக மத்திய சர்க்காரிடம் சென்றது என்று ஆராய்ந்து நஷ்ட ஈட்டைத் தீர்மானித்துக் கொள்வதிலே நாம் கவனமாக இருப்போம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, அவர்கள் இப்பொழுது காம்பன்சேஷன் கேட்டிருக்கிறார்களா? அப்படியென்றால், எவ்வளவு அமௌண்ட்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நஷ்ட ஈடு தர வேண்டுமென்று சொல்லி யிருக்கிறார்கள். அதைத்தான் நாங்கள் கொள்கையளவில் ஏற்று இருக்கிறோம். அப்படி அந்த நஷ்ட ஈட்டைத் தருவது என்பதைப்பற்றி பின்னால் தீர்மானித்துக்கொள்ளலாம், நிலத்தைக் கைப்பற்றியபிறகு என்றிருக்கிறோம்.

கைவினைப்பொருள் தொழிலாளர்கள்

*187 வினா—திரு. கே. எ. வகாப் : மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கிராமப்புறங்களில் கைவினைப் பொருள் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ளவர்கள் மேன்மையடையும் விதத்தில் தீவிர திட்டமேதும் அரசின் செயற்குறிப்பில் உள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. எ. வகாப் : தலைவரவர்களே, புகழ்பெற்ற நம் தமிழகத்தின் கைவினைப் பொருள்களைச் செய்யும் தன்மை மக்களிடத்திலே பாதுகாக்கப் படாமல் குறைந்துகொண்டே வருகிறது. எனவே, அதற்காக ஒரு தீவிரத் திட்டத்தை தயாரித்தால் ஒழிய, அதாவது அந்தக் கைவினைப் பொருள்கள் தயாரிப்பது வளர்ச்சியடையாது. . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி கேளுங்கள். 'அதாவது' 'அதாவது' என்று சொல்கிறீர்களே !

திரு. கே. எ. வகாப் : அப்படிப்பட்ட தீவிரத்திட்டத்தை அரசு செயல் படுத்துமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பெரும்பாலும் இந்த ஹேண்டிகிராப்ட்ஸ் ஆர்டிகிள்ஸ் பொறுத்தவரையில் கிராமங்களில் பரவலாக இது உற்பத்தி செய்யப்படுகிறது. அவர்களுக்குப் போதிய அளவு கடன் வசதி செய்து கொடுக்கின்ற திட்டங்களை நாம் உருவாக்கிட வேண்டும். அதற்கடுத்த படியாக, உற்பத்தி செய்யப்படுபவைகளுக்கு, விற்பனை செய்வதற்கு சந்தை இல்லாமல் அல்லல் படுகிறார்கள். இந்த இரண்டையும் கவனித்து முடிவு செய்து இப்பொழுது பல மாவட்டங்களில் 9 டிபார்ட்மெண்டல் எம்போரியம் வைத்துக்கொடுக்க முடிவு செய்து வைத்திருக்கிறோம். இதைக் கொஞ்சம் மாற்றி ஒவ்வொரு மாவட்டத்தின் தலைநகரத்திலும் ஒரு எம்போரியம் அமைத்து அதன்மூலம், மாவட்டத்தில் உள்ள உற்பத்தி செய்பவர்களோடு தொடர்புகொண்டு கடன் வசதிகள் செய்து கொடுத்து, உற்பத்தி செய்த பொருள்களின் விற்பனைக்கும் வகை செய்யும் முறையில் தகுந்த திட்டமாக்குகின்ற செயற்குறிப்பு அரசாங்கத்தின் பரிசீலனையில் இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மூலக்கேள்விக்கு இல்லை என்று பதில் சொல்லியாகிவிட்டது. இல்லாததற்கு இவ்வளவு கேள்விகளா ?